ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

24.04.2025

1. வேலவா கந்தா உமை போற்றி
வெற்றி முகம் காட்டு கலியுகத்தில்
காலனை வெல்லும் மகா சக்தி
கருணைமிக்க தருமவான்கட்கு தா என

2. என வேண்டி ஆறுமுக அரங்கனும்
என் வழிவரும் மக்கட்கெல்லாம்
ஞானமாக அருட்சுவடி வழியில்
நாட்டிடுவேன் விசுவாவசு தகர் திங்கள்

3. திங்களிலே ஈராம் குருவார அருளாசியை
தெய்வநெறி அரங்கன் சைவநெறி
ஓங்காரம் பட சரவணசோதியே நமோ நம என
ஓதிப்பார் உள் ஞானம் உணருமப்பா

4. அப்பனே அனுதினமும் சொல்லி வர
ஆபத்து இடை கண்டமெல்லாம்
தப்பாமல் அணுகா பாதுகாப்பு
தண்டாயுதன் அருளால் நடக்கும் என்பேன்

5. நடக்குமே தேக மன சுத்தி
நன்னெறி சைவநெறி ஏற்க
அடக்கமும் அமைதியும் பக்குவமும்
ஆறுமுகா அரங்கா என முழங்க

6. முழங்கவே முழுமைபட வாய்க்கும்
மூவுலகும் போற்றும் மாதருமம்
களங்கமற பிரணவக் குடிலில் நடக்க
கண்டனுகி பொருளுதவி தன்னை

7. உதவி தன்னை கரங்கள்பட செய்து
உடல் உழைப்பாய் தருமவழியில்
ஆதரவு தந்து தொண்டாற்றவே
அவரவர் அகத்துள் சோதியில்

8. சோதியில் வேலவனோடு என்னை
சூட்சுமக் காட்சியாக அறிய நேரும்
ஆதி அந்த பரம ரகசியமும்
அன்னதான சேவைதனிலே ஞானமாக

9. ஞானமாக அடைய நேருமப்பா
ஞானதேசிகன் இவ்வாறு ஆசிதர
ஞானபண்டிதன் யானும் இடைமறித்து
நாட்டுவேன் அரங்கன் சீடர்கட்கு சூட்சுமத்தை

10. சூட்சுமம்பட அரங்கனுக்கு வரும்
சிறந்த குருபூசை நாளதுடன்
மாட்சிமை மிக்க சித்ர பௌர்ணமி பூசை நாளிலும்
மகான் அரங்கன் பஞ்சவர்ணமாக

11. ஆகவே சோதியில் நிறமாறி காட்சி
ஆசியாக அரங்கனும் வேலவனும்
வகைபட இறங்கித் தருவோமப்பா
வையகத்தார் வந்து கலந்து வணங்கிட நலமாகும்
அரங்கமகானின் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி